**கொழும்பு பல்கலைக்கழகக் கணனி கற்கை நிறுவகம் - 2017**

---

கொழும்பு பல்கலைக்கழகத்தின் கணனி கற்கை நிறுவகத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிசார் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 107(5) ஆம் உப பிரிவு மற்றும் 18 ஆம் பிரிவின் கீழ் விதிக்கப்பட்ட 2002 இன் 01 ஆம் இலக்க கொழும்பு பல்கலைக்கழகத்தின் கணனி கற்கை நிறுவக வழிகாட்டியின் 23 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(1) ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் III ஆம் பிரிவு கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கொழும்பு பல்கலைக்கழகத்தின் கணனி கற்கை நிறுவகத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்கள்**

1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்திற்கு முரணான வகையிலும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினதும் உயர் கல்வி அமைச்சரினதும் சிபாரிசுடன் அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் 2006 திசெம்பர் 29 ஆந் திகதி கணனி கற்கை நிறுவகத்திற்குள் பிணையால் வரையறுக்கப்பட்ட கம்பனியொன்றாக வரையறுக்கப்பட்ட தீக்ஷண கம்பனி ஸ்தாபிக்கப்பட்டு 1982 இன் 17 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டிருந்தது. 2009 மார்ச் 02 ஆந் திகதி மீண்டும் 2007 இன் 7 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டிருந்தது.

வரையறுக்கப்பட்ட தீக்ஷண கம்பனி தனியான சட்டரீதியான அலகொன்றாக ஸ்தாபிக்கப்பட்டிருந்த போதிலும் கணனி கற்கை நிறுவகத்தின் வளங்களைப் பயன்படுத்தி கற்கை நிறுவக வளாகத்தில் பேணிச் செல்லப்படுகின்றது. கம்பனி அகவிதியின் 32 ஆவது பிரிவின் பிரகாரம் அக் கம்பனியின் முகாமைத்துவ சபைக்கு கொழும்பு பல்கலைக்கழக கணனி கற்கை நிறுவகத்தின் உத்தியோகத்தர்கள் உத்தியோகபூர்வமாக நியமிக்கப்பட வேண்டியிருந்தமை காண்பிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் வரையறுக்கப்பட்ட தீக்ஷண கம்பனி, கணனி கற்கை நிறுவகத்தின் முழு பூரண கட்டுப்பாட்டு அதிகாரத்துடன் காணப்படுகின்ற துணைக் கம்பனியொன்றாக இருக்கின்றமை தெளிவாகும். அதன் பிரகாரம் கணனி கற்கை நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்கள் வரையறுக்கப்பட்ட தீக்ஷண கம்பனியின் நிதிக்கூற்றுக்களுடன் ஒன்றிணைக்கப்பட்டு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2015 திசெம்பர் 31 ஆந் திகதிக்குரிய கணனி கற்கை நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்கள் தீக்ஷண கம்பனியின் நிதிக்கூற்றுக்களுடன் ஒன்றிணைக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 2.2.2 விளக்கமளிக்கப்படாத வித்தியாசங்கள்

நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்ட 07 சொத்துக்களின் மொத்தக் கிரயம் ரூபா 1,025,723,966 தொகையானதுடன் மீளாய்வாண்டில் திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், அத்தகைய சொத்துக்களின் கிரயம் ரூபா 1,024,178,700 தொகையானமையால் ரூபா 1,545,266 தொகையான விளக்கமளிக்கப்படாத வித்தியாசம் இருந்தது.

### 2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய மீதிகள்

இரண்டு ஆண்டுகளிற்கு மேலாக இருந்து வருகின்ற ரூபா 1,457,792 கூட்டுத்தொகையான வழங்கப்பட்ட சேவைகளின் 41 கடன் மீதிகள் மற்றும் 03 வருடங்களிலிருந்து 10 வருடங்கள் வரை இருக்கின்ற ரூபா 11,200 தொகையான 09 பண்டிகை முற்பண மீதிகள் நிலுவையாக இருந்ததுடன் அத்தகைய கடன் மீதிகளை அறவிடுவதற்கு போதிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) | 2016 சனவரி 01 இன் 01/2016 ஆம் இலக்க பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு | வெளிவாரி பாடநெறிகளிற்காக நடாத்தப்பட்ட பரீட்சைகள் நடவடிக்கைகளிற்கான அதிகூடிய செலுத்த வேண்டிய எல்லைகள் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டில் அத்தகைய எல்லைகளை விஞ்சி அலுவலகர்களுக்கு ரூபா 166,375 தொகை செலுத்தப்பட்டிருந்தபோதிலும் அந்த கொடுப்பனவுகள் சுற்றறிக்கையிலுள்ள எல்லைகளை விஞ்சி தொடர்ச்சியாக ஏற்படுத்தப்பட்டது. என கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. |
| (ஆ) | 2005 யூலை 14 இன் 03/2015 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் பிரிவு(ஆ) | முற்பணம் வழங்கப்பட்ட நடவடிக்கை முடிவடைந்த பின்னர் முற்பணங்கள் உடனடியாக தீர்ப்பனவு செய்யப்பட வேண்டிய போதிலும் 11 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட ரூபா 347,000 பெறுமதியான மொத்த முற்பணங்களை தீர்ப்பனவு செய்கையில் 33 நாட்கள் தொடக்கம் 169 நாட்கள் வரையிலான காலதாமதம் அவதானிக்கப்பட்டது. |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிசார் விளைவுகள் ரூபா 28,844,440 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 24,205,857 ஆக இருந்தது. முன்னைய ஆணடுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதிசார் விளைவுகள் ரூபா 4,638,583 இனால் அதிகரித்திருந்தது. பட்டப் பாடநெறியிலிருந்து ரூபா 25,378,916 பற்றாக்குறை பெறப்பட்டிருந்த போதிலும், வெளிவாரி வளங்களிலிருந்து ரூபா 34,436,009 மிகையொன்று பெறப்பட்டமை மேற்கூறப்பட்ட நிதிசார் விளைவின் முன்னேற்றத்திற்கான பிரதான காரணமாகும்.

மீளாய்வாண்டிற்கான மற்றும் முன்னைய நான்கு ஆண்டுகளின் நிதிசார் விளைவுகளை பகுப்பாய்வு செய்கையில், 2013 இல் இருந்து ரூபா 75,145,031 மிகையானது 2017 ஆம் ஆண்டளவில் ரூபா 28,844,440 வரை குறைவடைந்திருந்ததுடன் இந்த மீளாய்வாண்டின் போது நிதிசார் விளைவுகளில் குறிப்பிடத்தக்களவு முரண் அவதானிக்கப்பட்டது. எனினும், ஊழியர்கள் மிகையூதியம், பெறுமானத்தேய்வு மற்றும் செலுத்தப்பட்ட அரச வரிகளை நிதிசார் விளைவுகளில் திருத்திய போதிலும், 2013 இன் ரூபா 180,507,872 பங்களிப்பு 2014 இல் ரூபா 155,717,099 வரை குறைவடைந்த போதிலும், 2015 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ச்சியாக அதிகரிப்பதன் மூலம் மீளாய்வாண்டில் இது ரூபா 247,737,952 தொகையாகவிருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 திட்டமிடல்

செயல்நடவடிக்கைத் திட்டத்தை தயாரிக்கையில், இது பிரதான நோக்கங்கள் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டில் பூர்த்தியாக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட நடவடிக்கைகளிற்கான செலவீனம் மாத்திரம் காட்டப்பட்டிருந்தது. மேலும், மீளாய்வாண்டின் இறுதியளவில் தயாரிக்கப்பட்ட செயன்முன்னேற்ற அறிக்கையில் செயலாற்றல் குறிகாட்டிகள் காட்டப்படாமையால் நிதி மற்றும் செயலாற்றல் செயல்முன்னேற்றத்தை ஒப்பீடு செய்ய முடியாதிருந்தது.

#### 4.1.2 செயலாற்றல் மற்றும் மீளாய்வு

செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் மீளாய்வாண்டில் அமுல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்ட 26 நடவடிக்கைகள் செயற்படுத்துவதற்கு தவறப்பட்டிருந்தது.

### 4.2 முகாமைத்துவ நடவடிக்கைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிறுவனத்தின் உள்ளக பாடநெறிகளுக்கு சேர்க்கப்பட்ட மாணவர்களிற்கு விடுதி வசதிகளை வழங்குவதற்காக 2010 மற்றும் 2014 ஆம் ஆண்டில் வாடகை அடிப்படையில் விடுதிகள் பெறப்பட்டிருந்தது. மீளாய்வாண்டில் இதற்காக ரூபா 1,912,800 தொகையான வாடகை செலுத்தப்பட்டிருந்ததுடன், முகாமைத்துவத்தின் கவனமானது நிரந்தர விடுதி வசதிகளை பெறுவதற்கான பொருத்தமான நிகழ்ச்சித்திட்டமொன்றை ஒழுங்கமைப்பதற்காக செலுத்தப்பட வேண்டுமென அவதானிக்கப்பட்டது.

(ஆ) விரிவுரையாளரொருவரின் தகுதிகாண் காலமானது 2014 ஆகஸ்ட் 03 இல் பூர்த்திசெய்யப்பட்டிருந்த போதிலும், தகுதிகாண் காலத்தில் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட உயர்கல்வி ஆசிரியத்தொழிலுக்கான சான்றிதழ் தொடர்பான பாடநெறியானது 2018 ஏப்ரல் 27 வரையிலும் பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை. எனினும், கொழும்பு பல்கலைக்கழகத்தின் விடுமுறைகள் மற்றும் வெகுமதிசார் குழுவானது தகுதிகாண் காலத்தை நீடிக்க விரிவுரையாளருக்கு காசற்ற விடுமுறையை வழங்குவதற்கு 2017 ஒக்தோபர் 30 இல் தீர்மாணித்திருந்தது.

(இ) மீளாய்வாண்டின் இறுதியளவில் உடன்படிக்கைகளை மீறிய மூன்று விரிவுரையாளர்களிடமிருந்து ரூபா 2,032,948 தொகை பெறவேண்டியிருந்ததுடன் மீளாய்வாண்டில் அதன் இரண்டு விரிவுரையாளர்களிடமிருந்து எந்த தொகையும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 4.3 பதவியணியினர் நிர்வாகம்

நிறுவகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 127 வெற்றிடங்கள் இருந்ததுடன் சேவையை விரிவாக்குவதன் மூலம் ஒப்பந்த அடிப்படையில் 25 ஊழியர்களும் நாளாந்த கொடுப்பனவு அடிப்படையில் 43 ஊழியர்களுடன் வேலைக்கமர்த்தப்பட்டனர். ஆகையால், 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் வெற்றிடங்கள் இருந்ததுடன் ஊழியர்களை வேலைக்கமர்த்தல் நடவடிக்கைகளில் தாமதங்கள் இருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 5. நிலைபெறுதகு அபிவிருத்தி

### 5.1 நிலைபெறுதகு அபிவிருத்தி இலக்குகள் மற்றும் நோக்கங்களை அடைதல்

தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் அமைச்சரின் செயலாளரில் வழங்கப்பட்ட 2017 ஆகஸ்ட் 24 ஆந் திகதிய என்பி/எஸ்பி/எஸ்டீஜீ/17 ஆம் இலக்க கடிதம் மற்றும் நிலைபெறுதகு அபிவிருத்தி மீதான ஐக்கிய ராச்சியம் 2030 ‘‘நிகழ்ச்சித்திட்டம்’’ போன்றவற்றின் பிரகாரம் அனைத்து நிறுவனங்களும் நடவடிக்கைகள் எடுக்க வேண்டியிருந்த போதிலும் நிறுவனமானது மீளாய்வாண்டில் சொந்த நோக்கெல்லையின் கீழ் வருகின்ற நடவடிக்கைகள் மீது அமுல்படுத்த வேண்டியவை தொடர்பில் கவனஞ்செலுத்தியிருக்கவில்லை.

ஆகையால், சொந்த நோக்கெல்லையின் கீழ் வருகின்ற நடவடிக்கைகள் தொடர்பில் எல்லைகளை அடைவதற்கான நிலைபெறுதகு இலக்குகள், நோக்கங்கள், வீதி வரிபடங்கள் மற்றும் இலக்குகளை அடைவதை அளவிடுவதற்கான குறிகாட்டிகள் போன்றவற்றை இனங்காண்பதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 6.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

2016 சனவரி 01 ஆந் திகதிய 01/2016 ஆம் இலக்க சுற்றறிக்கையில் வெளிவாரி பரீட்சைகள் தொடர்பான கொடுப்பனவுகளை மேற்கொள்வது தொடர்பாக வழிநடத்தப்பட்டிருந்த போதிலும் அத்தகைய பாதீடுகளுக்கு முரணாக புதிய பாடநெறிகள் மற்றும் நிதிக்குழுவின் அங்கீகாரம் மற்றும் முகாமைத்துவ சபையின் அங்கீகாரம் அதற்காக கொடுக்கப்பட்டது.

**6.2 உள்ளகக் கணக்காய்வு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கொழும்பு பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கணக்காய்வு பிரிவுக்காக நிறுவகத்தின் உள்ளகக் கணக்காய்வு அமர்த்தப்பட்ட போதிலும் நிறுவகத்தின் கணக்காய்வு நடவடிக்கைகளானது போதிய கணக்காய்வு மேற்கொள்ளப்படாமையால் 2011 ஏப்ரல் 01 இல் தனியார் கம்பனிக்கு வழங்கப்பட்டது. முதல் வருடத்தின் அரைவாசிக்கான கணக்காய்வு மாத்திரம் 2017 திசெம்பர் 31 அளவில் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டத்தின் பிரகாரம் இரண்டாம் காலாண்டிற்காக மேற்கொள்ள வேண்டிய கணக்காய்வு இந்த அறிக்கைத்திகதியளவிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 134(3) இன் பிரகாரம், உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**6.3 பெறுகைகள்**

2017 ஆம் ஆண்டிற்கான பெறுகைத்திட்டத்திலும் உள்ளடக்கப்பட்டிருந்த ரூபா 18 மில்லியன் பெறுமதிகள் 02 பெறுகைகள் மீளாய்வாண்டில் பூர்த்தியாக்கப்பட்டிருக்காததுடன் ரூபா 3,538,574 தொகையானது 04 பெறுகைகளின் மதிப்பிடப்பட்ட கிரயத்தை விஞ்சி செலவிடப்பட்டிருக்கவில்லை.

**6.4 தீர்க்கப்படாத கணக்காய்வு பந்திகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிறுவகத்தால் 05 உத்தியோகத்தர்கள் மற்றும் இரண்டு விரிவுரையாளர்களுக்கு கொடுக்கப்பட்ட ரூபா 344,066 தொகையான உத்தியோகத்தர் கடன்கள் 05 வருடங்கள் தொடக்கம் 24 வருடங்கள் வரையான காலப்பகுதிக்காக தீர்ப்பனவு செய்யப்படாது இருந்தது.

(ஆ) பல்கலைக்கழகங்கள். வளாகங்கள் மற்றும் திறந்த பல்கலைக்கழகங்களின் 1978 இன் 16 ஆந் திகதிய பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் கட்டளைகள் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்க வேண்டுமென்பதுடன் அதில் இவை நடைமுறைக்கு வரும்பொழுது இயன்றளவு பாராளுமன்றத்திற்கு அறிக்கையிட வேண்டும். கொழும்பு பல்கலைக்கழகத்தின் கணனிக்கற்கையின் 2002 இன் 01 ஆம் இலக்க கட்டளையானது 2002 நவம்பர் 15 இன் 1262/32 ஆம் இலக்க விஷேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருந்த போதிலும் இது அறிக்கை திகதி வரையிலும் பாராளுமன்றத்தில் அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை.

(இ) நிர்வாகத்திற்காக நிர்மாணிக்கப்பட்ட 05 மாடி கட்டிடத்தொகுதியுடனான காணி மற்றும் கணனி கற்கை நிறுவக நடவடிக்கைகள் கொழும்பு பல்கலைக்கழகத்திற்கு சொந்தமாக இருப்பதுடன் அந்தக் காணியின் சட்ட உரிமையைப் பெறுவதற்கு அறிக்கைத் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**7. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளின் குறைபாடுகள் அவ்வப்போது நிறுவகத்தின் பணிப்பாளரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

| | முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | அவதானிப்புக்கள் |
| --- | --- | --- |
| (அ) | நிலையான சொத்துக் கட்டுப்பாடு | சொத்துப் பதிவேடு நாளதுவரையாகப் பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | பதவியணியினர் நிர்வாகம் | பதவியணியினர் தேவையின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியைத் திருத்துதல், மற்றும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்காமை. |
| (இ) | பெறுகைச் செய்முறை | பெறுகை திட்டத்தின் பிரகாரம் பெறுகைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | உள்ளகக் கணக்காய்வு | உள்ளகக் கணக்காய்வு காலதாமதமடைந்திருந்தது. |